பிரபஞ்ச ஜோதி பிரசுரம்-28

அபிமன்யு

(நாடகம்)

எழுதியது:

வெ. சாமிநாத சர்மா

பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்

சென்னை :: புதுக்கோட்டை

நமது பண்டைய இதிகாசங்களுள் ஒன்றாகிய மகாபாரதம் ஒரு பெருஞ் சுரங்கம். அதனைத் துருவிப் பார்த்தால், அறம், அரசியல், அஞ்சாமை, ஆண்மை, ஈகை, தியாகம், இப்படி யாரார்க்கு எங்கெந்த மணிகளின்மீது விருப்பமோ இவை பலவும் அதில் கிடைக்கின்றன. இம் மணிகளின் உருவமாய் சான்[...]ர் பலர் அதில் காட்சியளிக்[...]னர். இவர்களில் ஒருவனே உபமன்யு. பச்சிளங்குமரன்; ஆனால் வீரத்தின் வடிவம். இவன் வீர சொர்க்கமெய்திய வரலாறு இங்கு நாடக ரூபமாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

பிரபஞ்சஜோதி பிரசுரம்-28

அபிமன்யு

(நாடகம்)

எழுதியது:

வெ. சாமிநாத சர்மா

மதுரை காமராசர் பல்கலை...
அவ்வை
தி.க. சண்முகனார்
தமிழ்த்துறை

பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம்

சென்னை :: புதுக்கோட்டை

முதற்பதிப்பு: 1933
இரண்டாம் பதிப்பு: அக்டோபர் 1950
பதிப்பு உரிமை பெற்றது

Sales & Distribution

PRAPANCHA JYOTHI PRACHURALAYAM

PUDUKKOTTAI :: (TRICHY DIST)

Editorial

12 Sir Mohamed Usman Road

Thyagarayanagar

MADRAS 17

விலை அணா பன்னிரண்டு

Printed at The Janaki Printing & Binding Works, Pudukkottai

நாடக பாத்திரங்கள்

யுதிஷ்டிரன் பீமன் அர்ஜுனன் நகுலன் சகதேவன்	....	பஞ்ச பாண்டவர்கள்.
துரியோதனன் துச்சாதனன்	....	கௌரவர்களில் முதலிருவர்.
துரோணாசாரியார்	....	கௌரவர்களின் சேனாதிபதி.
சகுனி சல்யன் கர்னன் ஜயத்ரதன்	....	கௌரவர்களைச் சேர்ந்தவர்கள்.
அபிமன்யு	....	அர்ஜுனன் புதல்வன்.
வியாசர்	....	ஒரு தவச் சிரேஷ்டர்.
ஸ்ரீ கிருஷ்ணன்	....	பாண்டவர் சகாயன்.
சுபத்திரை	....	அபிமன்யுவின் தாயார்.
உத்தரை	....	அபிமன்யுவின் மனைவி.

மற்றும் போர்வீரர்கள், தோழி முதலியோர்.

கதை நிகழுமிடம்:—குருக்ஷேத்திரம்.

மதுரை காமராசர்

முதல் அங்கம்

முதற் களம்

இடம் :—குருக்ஷேத்திரத்தில் கௌரவர்கள் பாசறை.

காலம் :—இரவு.

[துரியோதனன், துச்சாதனன், ஜயத்ரதன், சகுனி முதலிய பலர் வீற்றிருக்கின்றனர். துரோணாசாரியார் தனியாக ஓர் உயர்ந்த ஸ்தானத்தில் அமர்ந்திருக்கிறார்.]

ஜயத்ரதன் :—[சிறிது ஏளனமாக] அந்தணர் தம் பொலிவும், அரசர் தம் வீரமும் நிறைந்த துரோணாசாரியார், கௌரவ சேனாதிபதியாகமட்டும் இல்லை; பாண்டவர்களின் குருவாகவும் இருக்கிறார்.

துரோணாசாரியார் :—அதில் என்ன தவறு?

துரியோதனன் :—அதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. படிப்பது வேதம்; பிடிப்பது வில்லாயுதம்! பூசையெல்லாம் இங்கே; பக்தியெல்லாம் அங்கே! உண்பதெல்லாம் இங்கே; உழைப்பதெல்லாம் அங்கே!

துரோ :—நிறுத்து, நிறுத்து சுயோதனா! உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யும் ஜாதி இன்னும் ஆரியா வர்த்தத்தில் உதிக்கவில்லை.

துரி :— உண்மை. ஆனல் காண்பது என்ன? தினந் தோறும் பாண்டவர்களின் வெற்றி! கௌரவர் களின் தோல்வி!

துரோ :—யுத்த களத்தில், வெற்றியும் தோல்வியும், ஆர வாரமும் அழுகையும் சகஜந்தானே.

துச்சாதனன் :—ஒரு நாள் வெற்றியும் ஒரு நாள் தோல்வியு மாக இருந்தால், இந்தச் சமாதானம் ஏற்றுக் கொள்ளப்படலாம். ஆனல்...

துரி :— தன் சேனையின் தோல்வியில் சேனதிபதிக்குக் கவலையில்லாமலிருக்கும்பொழுது...

ஜய :— ஆனல் சத்துருக்களின் வெற்றியைக் கண்டு மகிழ்ச்சி பொங்குகிறது.

துரி :— இதன் காரணந்தான் விளங்கவில்லை.

ஜய :— காரணமா? குரு துரோணாசாரியாருடைய அஸ் திரங்கள், சிஷ்யன் அர்ஜுனன் சந்நிதானத்தில் தலைவணங்கி, வாய் பொத்தி நிற்கின்றன!

துச் :— அவைகளுக்கு ஆசி கூறி அனுப்புகிறார் ஆசாரி யார்!

ஜய :— அர்ஜுனன் பாணம் விடுக்கும் திறமையைக் கண்டு, ஆசாரியாருடைய வாயிலிருந்து ஹா! ஹா! என்ற சப்தம் அவரை யறியாமலே வரு கிறது!

துச் :— அர்ஜுனன் செலுத்தும் குருபக்திக்கு இதைக் கூட சன்மானமாகச் செய்யக் கூடாதென்று ஆசாரியாரை நீ தடுக்கிறாயா?

ஜய :— அர்ஜுனனுக்குத் தோன்றாத் துணையாக ஸ்ரீ கிருஷ்ண பகவான் எப்பொழுதும் இருந்து

கொண்டிருக்கிறார். அவருடைய சுதர்சனம் பாண்டவர்களுக்கு ரட்சையாக விளங்குகிறது.

துரி :— ஆசாரியார் அந்தக் கிருஷ்ணனுக்குப் பக்தி சிரத்தையோடு வந்தனை செய்கிறார்!

துரோ :—ஏன் இப்படி நிந்தனை செய்கிறாய் துரியோதனா? ஏச்சுப் பேச்சுகளும், வியங்க வார்த்தைகளும் கோழைகளின் உரிமைப் பொருள்களன்றோ? இராஜ சபையிலே வீரம் பேசுவது சுலபந்தான்! ஆனால்...

ஜய :— ஆனால் என்று இழுத்துப் பேசவேண்டாம். யுத்த களத்திலேயும் கௌரவர்கள் தங்கள் சேனாதிபதிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டா லன்றி, புற முதுகு காட்ட மாட்டார்கள்.

துரோ :—[கோபத்துடன் எழுந்து] என்ன சொன்னாய்? சேனாதிபதிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டால்- [தலையசைத்துக் கொண்டே] உம் - நாவை உள்ளடக்கி வைத்துப் பேசு. உன்னைப் போன்ற அற்பப் பூச்சி களின் கலப்பினாலேயே, குரு வமிசத்தின் தூய் மையான இரத்தம் இப்பொழுது களங்கமடைந் திருக்கிறது. துரியோதனா! என்னுடைய சேனாதி பத்தியத்தில் உனக்கு நம்பிக்கையில்லையானால், இந்தா, இந்த உடைவாள்—[உடைவாளைக் கழற்று கிறார்.]

துரி :— ஆசாரியார் கோபித்துக்கொள்ளக் கூடாது. ஜயத்ரதா! நீங்கள் எல்லாரும் சும்மாயிருங்கள். தினந்தோறும் ஏற்பட்டு வரும் தோல்வியினால் மனமுடைந்து நாங்கள் இப்படிக் கூறினோமே யன்றி, தங்களை அவமானப்படுத்த வேண்டு மென்ற நோக்கமில்லை. [பொறுத்து] இன்றைய யுத்தத்திலேனும் நமக்கு வெற்றி ஏற்படுமா?

துரோ :—வெற்றியும் தோல்வியும் சேனாதிபதி வசத்தில் இருக்கிறதா? ஆயினும் ஒன்று கூறுகிறேன்;

அதுவும் உங்கள் சந்தேகத்தைத் தீர்த்தற் பொருட்டு. நாளைய யுத்தத்தில் பாண்டவ வீரர்களில் ஒருவனைக் கொல்விக்கிறேன்.

துரி :— இதை நாங்கள் ஒரு பிரதிக்ஞையாக ஏற்றுக் கொள்ளலாமா?

துரோ :—[கோபச் சிரிப்புடன்] பிரதிக்ஞையா? இதோ, என்னுடைய பிராமண தருமம்; என்னுடைய க்ஷத்திரிய வீரம். இவைகளைப் பணயமாக வைத்துக்கொள். நாளைய போரில் நான் வகுக்கும் சக்ரவியூகத்தை உடைதெறிய முயலும்போது, பாண்டவவீரர்களில் யாராவது ஒருவன் இறக்காவிட்டால் இவைகளை நீ எடுத்துக்கொள்ளலாம்.

துரி :— அப்படியானல் அந்தச் சக்ரவியூகத்தை உடைக்க எவராலும் முடியாதோ?

துரோ :—அர்ஜுனன் ஒருவனல்தான் முடியும். ஆனல் அதைப்பற்றிக் கவலை வேண்டுவதில்லை. சம்சப்தகர்களோடு யுத்தம் செய்வதற்காக அர்ஜுனன் ஸ்ரீ கிருஷ்ண பகவானுடன் சென்றிருக்கிறுன். ஆதலின் நமக்கு வெற்றி நிச்சயம்.

துச் :— நாளை மாலைக்குள் பார்ப்போம்!

துரோ :—பார்ப்போமா? ஆண்டவன் சாட்சியாக, ககன மார்க்கத்திலே சஞ்சரித்திடும் தேவ கணங்கள் சாட்சியாக, ப்ரஹ்மா வர்த்தமென்கிற இந்தப் புண்ணிய பூமியின் சாட்சியாக, நாளைய ரணரங்கத்திலே பாண்டவ வீரர்களிலொருவனுடைய தலை உருளும்படி செய்கிறேன். அப்படிச் செய்யாவிட்டால் வீர ஸ்வர்க்கம் எனக்கு இல்லாமற் போவதாக! பாரத தேசத்து வீராங்கனைகள் என்னைச் சபிப்பார்களாக! அந்தச் சாபத்திலே என்னுடல் மட்டுமல்ல, என்னுயிர் மட்டுமல்ல, என்னுடைய கீர்த்தியும், என்னுடைய வீர வாழ்க்கையும் சாப்பராகப் போகுமாக!

துரி:— ஆசாரியாருக்கு எங்கள் வணக்கம். [அனைவரும் வணங்குகிறார்கள்] சேனாதிபதியின் வாக்குறுதியிலே குரு வமிசத்தின் வாழ்வும் தாழ்வும் இருக்கின்றது.

துரோ:—பகவானுடைய திருவருள் எப்படியிருக்கிறதென்று யாருக்குத் தெரியும்? [இச்சமயத்தில் யுத்த முழக்கம் கேட்கிறது] அதோ! யுத்த கோஷம்! அனைவரும் என்னோடு சிறிது வாருங்கள். சக்ர வியூகத்தை வகுக்கச் சில ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

[துரோணாசாரியார் முன்செல்ல அனைவரும் பின் செல்கின்றனர்.]

துச்:— [சென்றுகொண்டே] யுதிஷ்டிரனுடைய தருமம், துரோணருடைய பிரதிக்ஞை முன்னர் என்ன செய்யப்போகிறதென்று பார்ப்போம்.

[அனைவரும் செல்கின்றனர்.]

இரண்டாவது களம்

இடம்:—பாண்டவர்களின் பாசறை.

காலம்:—காலை.

[அர்ஜுனனைத் தவிர்த்த பாண்டவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். யுதிஷ்டிரன் மட்டும் கவலையோடு உட்கார்ந்திருக்கிறான். அபிமன்பு ஒரு புறமாக நிற்கிறான். மற்ற வீரர்கள் சிறிது தூரத்தில் நிற்கிறார்கள்]

அபிமன்யு:—ஐயனே! வீண் கவலை எதற்கு? சத்துருக்கள் சக்ரவியூகம்வகுத்தாலென்ன?வச்சிரக்கோட்டை

கட்டினாலென்ன? நமது தேகத்தில் பிராணன் இருக்கும்வரை நாம் ஏன் கவலைப்படவேண்டும்?

யுதிஷ்டிரன் :—குமாரா! நீ ஒன்றும் அறிய மாட்டாய். சக்ரவியூகத்தை வகுத்துள்ளது யார் தெரியுமா? நமது குரு துரோணாசாரியார்.

அபி :— இருக்கட்டுமே. குருவா யிருந்தாலென்ன? உருவமே இல்லாத அந்தக் கடவுளா யிருந்தாலென்ன? [பீமனுடைய கையிலே கதாயுதம் இருக்கிறது; அர்ஜுனனுடைய அஸ்தத்திலே காண்டீவம் இருக்கிறது; இவைகளுக்கு மேலாக மாமா கிருஷ்ணருடைய சுதர்சன சக்ரம் நமக்குப் பாதுகாப்பா யிருக்கிறது. இன்னும் ஏன் வியாகுலப்பட்டுக் கொண்டிருக்க வேண்டும்?]

யுதி :— அபிமன்யு! சக்ரவியூகத்தை உடைத்தெறிய உனது தகப்பனார் அர்ஜுனன் ஒருவனால்தான் முடியும். அவன் இல்லாத சமயம் பார்த்தே கௌரவர்கள் இந்தச் சூழ்ச்சியைச் செய்திருக்கிறார்கள்.

அபி :— அர்ஜுனன் இல்லாவிட்டால் என்ன? அர்ஜுனன் அமிசமாக நான் இல்லையா? என்னுடைய முகத்திலே வீரக்களை இல்லையா? பாண்டுவமிசத்தின் பவித்திர ரத்தம் என் தேகத்திலே கொந்தளித்துக் குமுறி எழவில்லையா?

[பீமன் :—[தனக்குள்] அர்ஜுனனுடைய பூரண தேஜசும் இங்கே ஒளிவிட்டு வீசுகிறது!

யுதி :— மகனே! நீ தெரியாமல் பேசுகிறாய். அனுபவமில்லாத உற்சாகமானது கடிவாளமில்லாத குதிரையைப் போன்றது. எம்போன்றவராலேயே பிளக்க முடியாத சக்ரவியூகத்தை, உன்னால் எப்படி உடைத்தெறிய முடியும்? [தவிர, எங்களுடைய வருங்கால வாழ்வானது, உன்னு

டைய வளர்ச்சியிலேயே இருக்கிறது. அப்படியிருக்க உன்னை யுத்த களத்திற்கு அனுப்பிவிட்டு, நாங்கள் இங்கிருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்போமா?]

அபி:— அப்படியானால் இப்படியே கவலைப்பட்டுக் கொண்டிருக்கப் போகிறீர்களா? இதனால் சத்துருக்களின் சூழ்ச்சியைத் தகர்த்தெறிந்துவிட முடியுமா?

யுதி:— குமாரா! இந்தச் சத்துருக்களெல்லாம் நமது மித்துருக்களே. ஒரு மரத்தினின்று பிரிந்த இரண்டு கிளைகள்; ஒரு நிலத்தில் விளைந்த பயிர்.

அபி:— ஐயனே! என்னை மன்னிக்கவேண்டும். இது தவச்சாலை யல்ல; யுத்த பூமி. தருமோபதேசம் செய்யவோ அல்லது கேட்கவோ இங்கு நாம் கூடியிருக்கவில்லை. இது பாசறை. நாம் க்ஷத்திரியர்கள். கௌரவர்களோடு போர் நடைபெற்று வருகிறது.

யுதி:— அப்பா! பொறுமையாகப் பேசு.

அபி:— [வெறுப்புடன் தனக்குள்] பொறுமை! பொறுமை [பகிரங்கமாய்] பிதா! இந்தப் பொறுமை என்னும் படுகுழியிலே பாண்டு வமிசத்தின் நற்பெயரைப் புதைத்துவிடப் போகிறீர்களா? மாதா துரோபதையின் சபதம் அபத்தமாகிவிடப் போகிறதா? அன்று அவையிலே அடைந்த அவமானம், கருணையிலே கலந்து கரைந்துவிடப் போகிறதா?

[பீமன்:—[தனக்குள்] பேஷ்! மகனே பேஷ்!]

யுதி:— அபிமன்யு! சக்ரவியூகத்தை உடைத்தெறிவது என்பது எல்லாராலும் முடியாது. பார்த்தன் ஒருவனால்தான் முடியும். அந்த மகா மந்திரத்தை அவன் ஒருவனே அறிவான்.

அபி :— நானும் அறிவேன் ஐயனே! அஃதென்ன அவ்வளவு பெரிய காரியம்?

யுதி :— அதை நீ எப்பொழுது கற்றாய்? யாரிடம் கற்றாய்?

அபி :— மாதா சுபத்திரை கர்ப்பவதியாயிருந்த பொழுது, ஒரு நாளிரவு எனது தகப்பனார் சக்ரவியூகத்தை உடைத்தெறிவது எப்படி என்பதுபற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். அதை நான் வயிற்றிலிருந்த வண்ணம் கேட்டுக் கொண்டிருந்தேன். அஃது இப்பொழுது நன்றாக ஞாபகம் இருக்கிறது. இனியேனும் எனக்கு உத்திரவு கொடுப்பீர்களா?

யுதி :— சக்ரவியூகத்திற்குள் பிரவேசிக்கத் தெரிந்த உனக்கு, அதனின்றும் மீண்டுவரத் தெரியுமா?

அபி :— தெரியாது. ஆனால் அதைப்பற்றிக் கவலையுமில்லை. எப்பொழுது பிரவேசிக்கத் தெரிந்துவிட்டதோ, பிறகு அதனின்றும் திரும்பி வருவது அவ்வளவு கஷ்டமான செயலன்று. எனக்கு விரைவிலே விடை தாருங்கள்.

யுதி :— பாலா! உன் தகப்பனாருக்கு அது கஷ்டமான செயலன்று. ஆனால் மற்றவருக்கு முடியாது. தெரியாமலா துரோணர் அர்ஜுனன் இல்லாத சமயம் பார்த்து இந்தத் தந்திரத்தைக் கையாண்டிருக்கிறார்?

அபி :— எனது பிதா ஒருவர் இல்லாவிட்டால், பாரத யுத்தமே நின்று விடும் என்பது தங்கள் கருத்தா? பாண்டவர்களுக்கு ஏற்பட்ட களங்கத்தைத் துடைக்க அர்ஜுனன் ஒருவனால் தான் முடியும் என்பது தங்கள் எண்ணமா? அப்படியானால் நான் அர்ஜுனன் புத்திரனில்லை. அவருடைய புகழிலே பிரகாசித்துக் கொண்டிருக்க நான் விரும்பவில்லை. என்னுடைய வீரத்திலே, என் தேகத்தினின்று வழிந்தோடும் இரத்தப் பெருக்கில் ஜ்வலிக்கும் கீர்த்தியிலே, பாரத தேசத்து நாரீ

மணிகள் வாசிக்கும் யாழிலே நான் வாழ விரும்புகிறேன். [பொறுத்து] பிதா! குருவம்சத்தை கருவறுக்க எனக்கும் உரிமையுண்டு. அந்த அரவக் கொடியை அறுத்து நிலத்தில் வீழ்த்தி, அதன்மீது எனது இரதத்தைச் செலுத்த வேண்டும். பிதா பீமசேனருடைய விரதமும் முடிய வேண்டும். மாதா துரோபதையின் உள்ளம் குளிரவேண்டும். அந்த உள்ளக் குளிர்ச்சியிலே, தங்கள் ஆசீர்வாதத்தின் திரு நிழலிலே யான் சாந்தியடைய வேண்டும். பிதா! சீக்கிரம் உத்திரவு கொடுங்கள்.

யுதி :— ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவினுடைய அருளினுலும், எங்களுடைய ஆசீர்வாத பலத்தினுலும் நீ நீடூழி வாழக் கடவாய். ஆனல், மகனே! பதினறு வயது நிரம்பப் பெருத உன்னை சக்ரவியூகமென்னும் காலாக்கினியிலே எப்படி மனமொப்பித் தள்ளுவேன்?

அபி :— அந்த அக்கினியிலிருந்து தங்கத்தைப் போல் மிகப் பிரகாசமாய் தங்களிடம் மீண்டு வருவேன். அந்தப் பிரகாசத்திலே, தங்களுடைய ஆனந்தமும் கலந்து, பாண்டு வமிசத்திற்கு அழியாத புகழைத் தேடித்தரும்.

யுதி :— இல்லையப்பனே! ஒருகாலும் முடியாது. உன்னை யுத்தகளத்திற்கு விடை கொடுத்து அனுப்ப முடியாது. சுபத்திரா தேவியினல் அன்புடன் வளர்க்கப்பட்டு வந்த இந்தக் கோமள சரீரத்திலே சஸ்த்ர வர்ஷமா! இந்தப் பொன் மேனியிலே யுத்தகளத்தின் புழுதியா! வேண்டாம்; நீ யுத்தகளத்திற்குப் போகவேண்டாம். நேராக உத்தரையிடம் சென்று அவளுடைய தனிமையை நீக்கு.

அபி :— [சிறிது கோபச் சிரிப்புடன் தனக்குள்] அம்மட்டும் ஆடையாபரணங்களை அணிந்துகொண்டு அம்சதூளிகா மஞ்சத்தில் அயர்ந்து நித்திரைசெய் என்று சொல்லாமற் போனீர்! [பகிரங்கமாய்]

பிதா! என்னுடைய வீரத்திலே தங்களுக்கு ஏன் இவ்வளவு அவநம்பிக்கை? என்னை விடக் குறைந்த வயதிலே, சூரிய வம்ச திலகனாகிய இராம பிரான் கொடிய அரக்கர்களை அழித்து, விசுவாமித்திரருடைய யாகத்தைக் காப்பாற்ற வில்லையா? மண்ணினைக்காத்த அந்த மன்னன் மைந்தர்கள்—வால்மீகியின் வயோதிகத்திலே வளர்ச்சி பெற்ற லவகுசர்கள்-யாகக் குதிரையைப் பிடித்துக் கட்டவில்லையா? [தங்கள் சிறிய தந்தையைத் தோற்கடித்து பிதாவின் ஆசியைப் பெறவில்லையா?] அவர்களால் செய்ய முடிந்த காரியத்தை நான் செய்ய முடியாதா? இளைஞர்களால் செய்ய முடியாத காரியம் உலகத்திலே என்ன இருக்கிறது?

யுதி :— [அபிமன்யுவின் அருகிற்சென்று] ஒன்றுமில்லை. ஆயினும் நீ போருக்குச் செல்லக்கூடாது. நீ இளங் குழந்தை; எங்கள் வாழ்வின் செல்வம்; எங்கள் குலத்துக்கொரு விளக்கு. துரோணருடைய யுத்த கோசலத்தை நீ அறியமாட்டாய்.

அபி :— இல்லை! பிதா! நான் சென்று வெற்றியுடன் திரும்பி வருகிறேன். எனக்கு ஆசீர்வாதம் செய்யுங்கள். [தலை வணங்குகிறான்.]

யுதி :— பிடிவாதம் செய்யாதே. நீ தனியனாகச் செல்ல நாங்கள் உன் வழியைப் பார்த்து ஏங்கி நிற்பதா?

அபி :— தந்தையே! நான் ஏன் தனியனாகச் செல்கிறேன்? என் தேகத்திலே தோளிருக்க, தோளிலே அம்பறாத் தூணியிருக்க, கையிலே வில்லிருக்க, இடையிலே வாளிருக்க நான் யாருக்கு அஞ்ச வேண்டும்? அர்ஜுனன் புத்திரனாகப் பிறந்து, சுபத்திரா தேவியின் மடியிலே வளர்ந்து, தங்கள் அடியிலே பணிந்துநிற்கும் எனக்கு அச்சமேது? தனிமையேது? பிதா! இன்று எப்படியாவது நான் துரோணாசாரியாருடைய சந்நிதானத்தில் எனது தோள் வலியையும் வாள் வீச்சையும் காண்

பிக்க வேண்டும்; அர்ஜுனன் இல்லாத காலத்துப் பாண்டவர்களைத் தோற்கடித்துவிட வேண்டுமென்ற கௌரவர்களின் எண்ணம் பொய்யாகப் போகவேண்டும்; என்னுடைய பிரதிக்ஞை நிறைவேற வேண்டும்.

யுதி:— என்ன பிரதிக்ஞை அப்பா?

அபி:— சக்ரவியூகத்தை இன்று உடைத்தெறிவதாக பிரதிக்ஞை செய்து கொண்டிருக்கிறேன். இவ்வாரிய நாட்டினில் சூரிய தேவன் வீரியத்துடன் பிரகாசிக்க மறந்துவிட்ட போதிலும், இந்திரலோகத்திலிருந்து வந்தியர்கள் வந்து ஆரியாங்கனைகளின் அழகைக் கொள்ளை கொண்டுவிட்டபோதிலும், சிந்து மாநதியை மந்திரம் போட்டு மடக்கி அந்தர தலத்திற்கு அழைத்துக் கொண்டுவிட்ட போதிலும் நான் கொண்ட பிரதிக்ஞையை மாற்றமாட்டேன். என் தேகத்திலே பிராணன் இருக்கும் வரை, அந்தப் பிராணனோடு பாண்டு வமிசத்தின் பவித்ர ரத்தம் கலந்திருக்கிறவரை, அந்த இரத்தத்திலே எனது தாய்ப் பாலின் வேகம் இருக்கிற வரை நான் யுத்தம் புரிவேன். துரோணர் திகைக்க, துரியோதனன் தொடை நடுங்க, துச்சாதனன் தடுமாற, ரணரங்கத்திலே நான் நாட்டியம் செய்வேன். தங்கள் பாத தூளியைத் தாருங்கள். [வணங்குகிறான்.]

பீமன்:— அண்ணா! இனி யோசிக்கவேண்டாம். குமாரனுடைய பிரதிக்ஞை நிறைவேறுவதற்கு உதவி செய்யுங்கள். அர்ஜுனன் இல்லாத குறையை அபிமன்யு நிறைவேற்றி வைப்பான்.

யுதி:— [அபிமன்யுவின் சிரத்தில் கரம் வைத்து] அப்பா! உனது பிரதிக்ஞை பூர்த்தியாவதாக! வெற்றிமாலையுடன் விரைவிலே திரும்பி வந்து எங்களை மகிழ்விப்பாயாக! அர்ஜுனன் ஆண்டகைமையும், பகவான் வாசுதேவனின் நல்லாசியும் உன்னைக் காப்பாற்றட்டும்.

[அபிமன்யு அனைவரையும் வணங்கிவிட்டுச் செல்கிறான்]

யுதி :— [அபிமன்யு சென்ற வழியைப் பார்த்துக் கொண்டே பீமனைப் பார்த்து] தம்பீ! விஜயன் இல்லாதசமயம்நமக்கு இந்தப் பரிசோதனை ஏற்பட வேண்டுமா?

பீமன் :— அண்ணு! அபிமன்யுவைத் தனியாகச் செல்ல விடுதல் சரியன்று.

யுதி :— ஆம்; பாசறையில் இனி நமக்கென்ன வேலை?

[யுத்தகோஷம். அனைவரும் செல்கிறார்கள்.]

மூன்ருவது களம்

இடம் :—பாண்டவர் பாசறையைச் சேர்ந்த அந்தப்புர உத்தியான வனம்.

காலம் :—காலை.

[உத்தரை ஊஞ்சற் பலகையில் ஆடிக்கொண்டிருக்கிருள்; அபிமன்யு வந்தவுடன் நிறுத்தி விடுகிருள்]

அபிமன்யு :—உத்தரே! ஏன் நிறுத்திவிட்டாய்? நீ ஊஞ்சலில் ஆடிக்கொண்டிருப்பது கரிய மேகத்திலே மின்னற்கொடி தோன்றி மறைவதுபோல் இருக்கிறது.

உத்தரை :—எனக்கு வேண்டாம் இந்த வர்ணனை! [முகத்தைத் திருப்பிக் கொள்கிருள்]

அபி :— என்ன கோபம் என் மீது?

உத் :— ஆமாம். புருஷர்கள் எப்பொழுதும் சுயநலப்

பிரியர்கள். தங்களுக்கு ஏதேனும் காரியம் ஆக வேண்டுமானல் ஸ்திரீகளை ஸ்தோத்திரம் செய்வது; இல்லாவிட்டால் அடியோடு அவர்களை மறந்து விடுவது.

அபி :— [நகைத்து] கோபத்திலேகூட நீ சோபிக்கிருய். உன் நெற்றியிலே புருவம் ஏறுவது இந்திரன் வில்லிலே நாண் ஏறுவது போலிருக்கிறது.

உத் :— [எழுந்து சிறிது ஒதுங்கிப்போய் திரும்பி நிற்கிருள்]

அபி :— [உத்தரையின் சமீபம் சென்று தோளின் மீது கை வைத்து] உத்தரே!

உத் :— என்னைத் தொடவேண்டாம். இரண்டு நாட்களாக மறந்துவிடப்பட்டிருந்த உத்தரை இன்று மட்டும் வேண்டியிருக்கிறது.

அபி :— இல்லை கண்ணே! வேலை மிகுதியால் வர முடியவில்லை. உன்னை நான் எப்படி மறக்க முடியும்? மறந்து எப்படி இருக்கமுடியும்? என் உள்ளக் கோயிலிலே வைத்துப் பூசிக்கப்படும் தேவியல்லவோ நீ!

உத் :— ஆமாம்! நீங்கள் நல்ல பூசாரிதான். [இருவரும் ஊஞ்சலில் அமர்கிருர்கள்.] இரண்டு நாட்களாக உங்களைப் பாராமல் நான் படும் வேதனை எனக்கன்ருே தெரியும்! நீங்கள் அலட்சியமாக வில்லென்றும் அம்பென்றும் சிந்தித்துக்கொண்டு ரணரங்கத்திலேயே ஐக்கியமாகி விடுகிறீர்கள். நான் இங்கே தனிமையில் பெருமூச்சு விட்டவண்ணம் கண்ணீரால் தங்கள் உருவத்திற்கு அபிஷேகம் செய்துகொண்டே விஜயலட்சுமியைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்க வேண்டியதுதான். இதுதான் நீங்கள் என்மீது வைத்திருக்கும் பிரேமை! [அழத்தொடங்குகிருள்]

அபி :— அழாதே! யுத்த களத்தில் க்ஷத்திரியர்கள் தங்கள் கடமையைச் செய்ய வேண்டாமா? க்ஷத்ராணிகள், தங்கள் ஆடவர்களுடைய வெற்றியையன்றோ பிரார்த்தித்துக் கொண்டிருக்க வேண்டும்?

உத் :— போங்கள் பிராணநாதா! தாங்கள் எப்பொழுதும் என்னிடத்திலேயே இருக்கவேண்டும்.

அபி :— உன்னிடத்திலேயென்ன, உன்னுள்ளத்திலேயே நான் இருக்கிறேனே!

உத் :— ஆமாம்; இந்த இடத்தைவிட்டு நீங்கள் இனி எங்கேயும் போகக்கூடாது.

அபி :— யுத்தம் முடிந்த பிறகு உன் உத்திரவுபடியே நடந்து கொள்கிறேன்.

உத் :— அதுவரையில்...?

அபி :— [பொறுத்து] உத்தரே! இன்று நான் அதிக நேரம் இங்கே தங்கியிருக்க முடியாது.

உத் :— ஏன்?

அபி :— இன்று நான் பாண்டவ சேனதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறேன். தகப்பனர் இல்லாத காலத்தில் துரோணசாரியாரால் வகுக்கப்பட்டுள்ள சக்ரவியூகத்தை உடைத்தெறிய, யுதிஷ்டிரருடைய ஆக்ஞையையும் ஆசீர்வாதத்தையும் பெற்றிருக்கிறேன்.

உத் :— பிராணநாதா! [கண்ணீர் விடுகிருள்]

அபி :— உத்தரே! இஃதென்ன? உன் கமல நேத்திரத்திலே பனித்துளிபோல் கண்ணீர்? நீ வீரபத்தினியல்லவோ?

உத் :— பிரியதம! நீங்கள் இன்று யுத்தத்திற்குப் போக வேண்டாம். வேண்டாம்—இதோ! என்னைப்

பார்த்துச் சொல்லுங்கள். நீங்கள் சொல்லும் போதே என் இருதயத்தில் அந்தகாரம் சூழ்ந்து கொண்டுவிட்டது; அடிவயிற்றிலே துக்க அலே மோத ஆரம்பித்து விட்டது. இருங்கள்— [பொறுத்து] ஐயோ! எனது வலது கண் துடிக்கிறதே!—என்ன இருட்படலம்—! வேண்டாம் பிராணநாதா! இந்த அபசகுனத்துடன் நீங்கள் யுத்தத்திற்குப் போகவேண்டாம்.

அபி :— பிரியே! ஏன் இப்படி அஞ்சுகிருய்? யுத்த களத்தில் கோழைகளன்ருே சகுனம் பார்ப்பார்கள்? வெற்றியோ தோல்வியோவென்று கவலேப்படுவார்கள்?

உத் :— ஆயினும் என் மனம் கேட்கமாட்டேனென்கிறதே.

அபி :— உத்தம க்ஷத்திரிய வமிசத்திலே பிறந்த நீ இப்படி ஏக்கங்கொள்ளலாமா? க்ஷத்திரியர்கள் நிம்மதியாக நித்திரை புரிய வேண்டிய இடம் சமர்க்களம் அல்லவோ?

உத் :— ஐயோ! பிராண நாதா! பிராண நாதா!

அபி :— பிரியே! உள்ள நிலேயை அறியாமல் நீ இப்படிக் கலங்குகிருய்? சம்சப்தகர்களோடு போர் புரிய வேண்டி, மாமா கிருஷ்ணருடன் பிதா சென்றிருக்கிருர். சக்ரவியூகத்தை நான் தவிர வேறெவரும் உடைத்தெறிய முடியாது. இந்நிலேமையில் என் கடமை என்ன? காதல் மேடையில் களி நடனம் புரிந்துகொண்டிருப்பதா?

உத் :— இல்லே பிராண நாதா!

அபி :— அப்படியாளுல் சந்தோஷமாக விடை கொடு. என்னுலே பாண்டவ சேனே தோல்வியடைய வேண்டுமென்று நீ விரும்புகிருயா?

உத் :— நான் அப்படி விரும்புவேனு?

அபி :— பிறகு ஏன் நீ கலங்குகிருய்?

உத் :— என்னையும் கூட அழைத்துச் செல்லுங்கள்.

அபி :— [நகைத்து] நன்ருய் இருக்கிறது நீ கூறுவது! ஆடவர்களோடு பெண்கள் யுத்தகளத்திற்கு வருவதா? பிணக்குவியல்களும், இரத்தப் பெருக்கமும், கழுகுகளின் இரைச்சலும் எவரையும் கதி கலங்கிடச் செய்யுமே.

உத் :— ஆரியாவர்த்தத்திலே ஸ்திரீகள் தங்கள் கணவன்மார்களுக்கு யுத்தகளத்தில் பலவித உதவிகளைச் செய்திருப்பதாகச் சரித்திரங்கள் கூறுகின்றனவே? சம்பராசுர யுத்தத்திலே தசரதருக்குக் கைகேயி உதவி புரியவில்லையா?

அபி :— அந்த வீர பத்தினிகளின் தியாகம் ஆரியாவர்த்தத்தின் இதிகாசத்திலே எப்பொழுதும் பிரகாசித்துக்கொண்டிருக்கும். ஆனல் அவர்கள் நிலைமை வேறு. இப்பொழுது நீ யுத்த களத்தில் கோரக் காட்சியைக் காணக்கூடாத நிலைமையிலிருக்கிருய். அதனைப் பார்த்து உன் மனம் கலக்கமடையுமானல் உனக்கு தேக நலிவு உண்டாகி நமது பிற்கால வாழ்விற்குப் பங்கம் ஏற்படக்கூடும். ஆதலின் அந்த எண்ணத்தை நீ மறந்துவிடு.

உத் :— ஆனல், தாங்களும் யுத்தத்தை மறந்துவிடுங்கள்.

அபி :— என்ன இது? உத்தரே! வீரர் குலத்திலே உதித்து, வீரபுத்திரனை மணந்து, வீர மாதாவாக விளங்க வேண்டிய நீ, வீரர் கடமையினின்று என்னைத் தடுக்கலாமா? அமர்க்களத்திலே அமரரும் ஆரியரும் அறிய, எனது பிதா தர்ம புத்திரருடைய சந்நிதானத்தில், நான் செய்து கொண்ட பிரதிக்ஞையை உன் பிரேமையினல் பங்கப்படுத்த விரும்புகிருயா? எனது க்ஷத்திரிய தர்மத்தை உனது கண்ணீரினல் கரைத்துவிடுவதில் உனக்குத்

திருப்தியா? அர்ஜுனன் இல்லாத காலத்து அவனுடைய மகன் பாண்டு வமிசத்திற்கு இழிவு தேடி வைத்தானென்று பிற்கால சந்ததியார் பழி கூறுவாராகில் அஃது உன்னைச் சாராதா?

உத்:— [பொறுத்து] பிரதிக்ஞை செய்திருக்கிறீர்களா? அப்படியானால் அதனின்றும் மாறவேண்டாம். பெண்களின் பவித்ரமான பிரேமையிலே தெய்விக சக்தியில்லையென்று உலகம் எல்லாம் சேர்ந்து உத்கோஷித்த போதிலும், தாங்கள் க்ஷத்திரிய தர்மத்தை, செய்து கொண்ட பிரதிக்ஞையைக் கைசோர விட வேண்டாம்.

அபி:— அப்படியானால் சிரித்த முகத்துடன் எனக்கு விடை கொடு.

உத்:— என் மனம் கலங்குகிறது.

அபி:— பிரியே! யுத்தகளத்திலிருந்து வெற்றிமாலையுடன் விரைவினில் உன்னிடம் வந்து சேருகிறேன். நீ கவலைப்படாதே. உன்னுடைய பவித்ரமான பிரேமையானது ரணகளத்தில் எனக்கு ரக்ஷையாக இருக்கும். பகவான் கிருஷ்ணர் நமது பக்கம் இருக்கும்போது நம்முடைய சத்துருக்கள் எப்படி உயிரோடு வாழ்ந்திருக்க முடியும்? கவலைப்படாமல் தைரியமாய் இரு. என்னுடைய பிரிவாற்றாமையில் மாதா சுபத்திரையின் வாத்ஸல்யம் உன்னைக் காத்து நிற்கும். [யுத்த கோஷம் கேட்கிறது.] அதோ! வீர பேரிகை. மாதாவிடம் விடை பெற்றுக்கொண்டு விரைவிலே செல்ல வேண்டும். உத்தரே! உன்னுடைய பதி பிரேமையிலே என்னுடைய வெற்றியிருக்கிறது. நான் வரட்டுமா? [பொறுத்துத் திரும்பிப் பார்த்து] அதோ மாதாவே வந்து விட்டனரே!

[சுபத்திரை பிரவேசிக்கிறாள்]

அபி:— அம்மா! நமஸ்காரம். [வணங்குகிறான்]

அவ்வை
தி. க. சண்முகம்

சுபத்திரை :—[சிரசிலே கரம் வைத்து] அப்பா! சிரஞ்சீவியாய், வீரர்களின் ஜோதியாய் விளங்குவாயாக.

அபி :— தங்கள் பாத தூளி என் சிரசிலே இருக்கும் வரை எனக்கு என்ன குறையம்மா!

சுப :— மகனே! பாண்டவர்கள் முன்னிலையில் நீ ஏதோ பிரதிக்ஞை செய்திருப்பதாகக் கேள்விப்பட்டேன். அஃதென்ன?

அபி :— ஆம் அம்மா! பிதாவின் நற்பெயரைப் புத்திரன் காப்பாற்ற வேண்டாமா?

சுப :— உன்னுடைய பெரிய தகப்பனார் உனக்கு அனுமதி அளித்துவிட்டாரா?

அபி :— மிகுந்த மகிழ்ச்சியுடன். இதோ, உத்தரையின் உத்தரவும் பெற்றுவிட்டேன்.

சுப :— [உத்தரையைப் பார்த்து] உத்தரே! சாதாரண அபலைகள் மாதிரி இந்தச் சமயத்தில் கண்ணீர்விடாதே. என்னுடைய புத்திரனுக்கு மாலையிட்ட பிறகு உனக்கென்ன குறை? [பொறுத்து அபிமன்யுவைப் பார்த்து] குமாரா! மகாவீரரும், நிறைந்த அனுபவமுடையவருமான துரோணாசாரியார் வகுத்துள்ள சக்ரவியூகத்தை உன்னால் உடைத்தெறிய முடியுமா? உன் பிதாவும் இங்கு இல்லையே. அவரன்றி வேறு யாரால் சக்ரவியூகத்தை உடைத்தெறிய முடியும்?

அபி :— என்னால் முடியும் அம்மணி! நான் அர்ஜுன மகாராஜருடைய புத்திரனல்லவா?

சுப :— ஆயினும் மிகக் கடினமாயிற்றே?

அபி :— மிகச் சுலபமம்மணி. பாரத தேசத்திலே பிறந்து, சிந்து நதியின் நீரைப்பருகி, இமயவெற்பின் காற்றை நுகர்ந்த நான், இந்தச் சாதாரண யுத்தத்

தில் பின் வாங்கினால் உலகம் என்னை என்ன சொல்லும்? ப்ரஹ்மா வர்த்தத்தின் பிற்கால சந்ததியார் என்னை ஏசிப்பாட மாட்டார்களா? இந்தப் பரிகாசத்திற்கு இடமளிக்க நீங்கள் விரும்புகின்றீர்களா? வீர மாதாவான தங்களுடைய உதரத்திலே உதித்து, பாண்டவர்களின் ஆனந்த பாஷ்பத்திலே வளர்ச்சியடைந்த நான், கோழையாகிப் புழுத்த புழுவைப்போல் தங்கள் பக்கத்தில் எப்பொழுதும் நெளிந்துகொண்டிருப் பதைக் காண விரும்புகின்றீர்களா? அல்லது க்ஷத்திரியர்களின் பரம்பரையான தர்மப்படி ரணகளத்தில் சத்துருக்களை யெல்லாம் ஒரு கணத்தில் பிணமலையாக்கி அதன் அடியிலே நான் மடிந்து கிடப்பதைக்காண விரும்புகின்றீர்களா? [பொறுத்து] அம்மணி! ஏன் தயங்குகிறீர்கள்? தங்களுடைய தூய்மையான தாய்மைக்கு எங்கே என்னுடைய தோல்வியினால் களங்கம் உண்டாகப் போகிறதோ என்று சிந்திக்கிறீர்களா? இந்தச் சிந்தனையின் பயனாக, என்னைப் போருக்கு அனுப்ப மறுத்துவிடுவீர்களாயின், இந்த வாள் கொண்டு என்னை இங்கேயே வெட்டி வீழ்த்திவிடுங்கள். இதற்கு மனமிசையாவிட்டால், தங்களுடைய சந்நிதானத்தில் தலை வணங்கி நிற்கும் இந்தச் சிரத்தை, இந்தத் தாள்கொண்டு மிதித்துத் தரையோடு தரையாகத் தேய்த்துவிடுங்கள்.

சுப :— அந்தத் துர்ப்பாக்கியம் நேரிடாதபடி என்னையும் உன்னையும் தேவர்கள் காப்பார்களாக! [பொறுத்து] அபிமன்யு! இனியும் தாமதியாதே. இதோ, வீர திலகம் இடுகிறேன். [நெற்றியில் திலகமிடுகிறாள்] என்னுடைய கண்ணீரினால் குழைத்து இந்தத் திலகத்தை இடுகிறேனென்று நினையாதே. இதில் உன் மாதாவின் பெருமை நிரம்பியிருக்கிறது; அவளுடைய பிற்காலக் கீர்த்தி அடங்கியிருக்கிறது. மகனே! யுத்தகளத்தில் இந்தத் திலகம் உனக்கு ரக்ஷையாக இருந்து காப்பாற்

றும். தாயன்பானது உனக்கு வழி காட்டிச் செல்லும். ஆனால் நீ க்ஷத்திரியர்களின் கடமையினின்று விலகிச் செல்லாதே. சத்துருக்களின் அஸ்திரங்களுக்கு உன் மார்பகத்தைத் தஞ்சமாகக் கொடு. ஆனால் காயமடைந்த சிங்கம் போல், முதுகிலே காயங்களுடன் இந்தப் பாசறையை நோக்கி வருவாயாகில், அந்தப்புரச் சேடியரும் உன்னைக் கண்ணெடுத்துப் பார்க்க மாட்டார்கள். நமது மூதாதையர்கள் ஒருங்கு சேர்ந்து, சாபமும் கோபமும் நிறைந்த கோஷத்துடன் உன்னை நரகவாயிலுக்கு அழைத்துச் செல்வார்கள். [பொறுத்து] மகனே! பாண்டவர் குலப்பெருமையாக, காண்டீவதாரியின் பிரதிநிதியாக, யுத்தகளத்திற்குச் செல்கிறாய்என்பதை ஞாபகப்படுத்திக்கொள். வெற்றி மாலே யணிந்து விஜய கோஷத்துடன் விரைவினில் திரும்பி வா. [அபிமன்யு வணங்குகிறான். சுபத்திரை ஆசீர்வதிக்கிறாள்]

[காட்சி முடிகிறது]

இரண்டாவது அங்கம்

முதற் களம்

இடம் :—குருக்ஷேத்திர யுத்தகளம்.

காலம் :—காலை.

[அபிமன்யு இரதத்திலிருந்த வண்ணம் சக்ரவியூகத்திற்குள் பிரவேசிக்கிறான். யுத்த கோஷம்]

அபிமன்யு :—[இரதத்திலிருந்து இறங்கி தனக்குள்] அரனுடைய வரம்பெற்ற ஜயத்ரதனே மூர்ச்சையாகிவிட்டான்! மற்றவர் எம்மாத்திரம்! நூற்றுவரிலே ஒருவர்கூட அகப்படவில்லையா இந்த வாயில் காக்கும் வேலைக்கு? சிந்து நாட்டு வேந்தன் வீழ்ந்து விட்டதைக் கண்டு சேனைகளெல்லாம் கலங்கியோடுகின்றன. [எதிரில் யுத்த கோஷம். திரும்பிப் பார்த்து] இது யார்? ஆசாரியாரா? பிதாவுக்குப் படைக்கலப் பயிற்சியளித்த பெருமான் என்மீது போர் தொடுக்க வந்திருக்கிறாரா? [பொறுத்து] அடிகாள்! அபிமன்யு வணக்கம். [அம்பெய்கிறான்]

[துரோணாசாரியார் இரதத்தோடு பிரவேசிக்கிறார்]

துரோ :—அன்பைப் புகுத்தி அம்பைச் செலுத்தும் ஆற்றல் படைத்த அர்ஜுனன் மகன் அபிமன்யு அமரனாய் வாழட்டும். குமாரா! நீயே தந்தைக்குத் தக்க மைந்தன்.

அபி :— ஆசாரியார் ஆசீர்வதிக்க வந்திருக்கிறாரா? அல்லது அபிமன்யுவின் ஆண்மையைப் பரிசோதனை செய்ய வந்திருக்கிறாரா?

துரோ :—குமாரா! சக்ரவியூகமென்னும் இந்தப் பயங்கரப் படுகுழியிலே தெரியாமல் வந்திறங்கிவிட்டாய். விரைவிலே இதனின்றும் வெளியேறிச்செல்.

அபி :— என்னுடைய பணிவுக்கு இந்தக் கனிவை நான் எதிர்பார்க்க வில்லையே. "அமர்க்களத்திலே அமரர் கோன் வந்தெதிர்த்தபோதிலும் அடர்ந்து பொருவதே ஆண்மைக் கழகு" என்ற தங்களுடைய உபதேசத்தையே என் பிதா எனக்கு இளமையில் ஊட்டி வளர்த்தார். என்னுடைய வளர்ச்சியில் தங்களுக்கு உண்மையிலேயே மகிழ்ச்சி யிருக்குமானால், தயை செய்து தாங்கள் விலகிச் செல்லுங்கள்.

துரோ :—அபிமன்யு! பாண்டவர் குலத்தில் சுபத்திரையினால் ஏற்றி வைக்கப்பட்ட விளக்கு நீ. உத்தரையின் அன்பிலே—அர்ஜுனன் ஆண்மையிலே நீ பிரகாசித்து வருகிறாய். என் அம்பு கொண்டு இந்த விளக்கை அணைக்க நான் விரும்பவில்லை. குருக்ஷேத்திரக் குருதியிலே அர்ஜுனனின் பிரதிபிம்பம் மிதந்து செல்வதை இந்தக் கண்கொண்டு பார்க்க வேண்டுமா? வேண்டாம் மகனே! என் வார்த்தையைக் கேள். சீக்கிரம் வெளிவேறிவிடு.

அபி :— ஆசாரிய! உங்கள் கருணைக்கு இரங்குகிறேன். சத்துருக்களின் இரக்கத்திலே உயிர்வாழ்ந்திருக்க க்ஷத்திரியர்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள் என்ற உண்மையைத்தங்கள் மூப்பு மறைத்துவிட்டதா? அல்லது இளைஞனை அச்சுறுத்தி வெளியேற்றிவிட்டு வெற்றிச்சங்கை ஊதிவிடலாம் என்று எண்ணி விட்டீர்களா?

துரோ :—அந்த வெற்றிச் சங்கு, உன் இறுதிச் சடங்கின் சங்காகவும் இருக்க வேண்டுமா என்றுதான் நான் கவலைப்படுகிறேன்.

அபி :— கவலையா? யாரைப்பற்றி? தயை செய்து என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். என் மீது இரக்கமும் காட்டவேண்டாம்.

துரோ :—அபிமன்யு! கௌரவர்களின் கோபாக்கினி யானது துரோணரின் பிரதிக்ஞையினால் ஆகுதி செய்யப்பட்டு சக்ரவியூகமென்னும் இந்த ஓம குண்டத்திலே கொழுந்து விட்டெரிந்து கொண் டிருக்கிறது. அதில் உன்னை ஒரு சமித்தாகப் போட நான் விரும்பவில்லை.

அபி :— [உரக்கச் சிரித்து] அந்த ஓம குண்டத்தில் நீங்கள் விழுந்துவிடாதபடி முதலில் உங்களைக் காப் பாற்றிக் கொள்ளுங்கள்; பிறகு என்னைச் சமித்தாகப் போடலாம். விசுவாமித்திரருடைய யாகத்தை இராம லட்சுமணர்கள் என்னும் சிறுவர்கள்தான் காப்பாற்றினார்கள் என்பதை இச்சமயத்தில் நினைவூட்டுகிறேன்.

துரோ :—வீணாக ஏன் வார்த்தைகளைக் கொட்டுகிறாய்?

அபி :— ஆம்; யுத்தகளத்தில் வீரர்கள் சந்தித்தால் பேச்சுக்கு இடமேது? அப்படியானால் ஆயுத மெடுங்கள். [பொறுத்து] என்ன யோசனை? கடைசி முறையாகக் கௌரவர்களிடத்தில் விடை பெற்றுக்கொண்டு வரவில்லையா? அல்லது தங்களுடைய தேகத்திலிருந்து வழிந்தோடும் இரத்தப் பெருக்கிலேயே தங்களுக்குத் திலதர்ப் பணம் செய்ய வேண்டுமென்று மகாத்மா அசுவத்தாமாவுக்குக் கட்டளையிட வேண்டுமா?

துரோ :—அபிமன்யு! மீண்டுங் கூறுகிறேன். திரும்பிச் சென்றுவிடு. உன் உயிரைப் போக்கி அதனால் அர்ஜுனன் வாழ்வைக் குலைக்க நான் விரும்ப வில்லை.

அபி :— ஆசாரியார் சத்துருவினிடத்தில் ஏன் இவ்வளவு கருணை காட்டுகிறார் என்பது எனக்கு விளங்கவே இல்லை.

துரோ :—அபிமன்யு! யுத்தகளத்திலேதான் நான் பாண்ட வர்களுக்குச் சத்துரு; மற்றச் சமயங்களில் நான் அவர்களுடைய மித்திரன்.

அபி :— அதனால்தான் எனது பிதா இல்லாத சமயம் பார்த்து இந்தச் சக்ரவியூகத்தை வகுத்தீர்களோ? பாண்டவர் சேனையை நிர்மூலமாக்க இந்தப் போர்க்கோலத்துடன் வந்திருக்கிறீர்களோ?

துரோ :—கேவலம் கடமையைக் கருதி—சொன்ன சொல் லுக்குக் கட்டுப்பட்டு—இந்தக் காரியத்தில் இறங்கியிருக்கிறேன்.

அபி :— அப்படியானல் நான் என் கடமையைச் செய்ய வேண்டாமா? யுத்தகளத்திற்கு வெளியே உங் களை என் பிதாவின் குருவாகப் போற்றுவேன். ஆனல் போர்க்களத்தில் உங்களை ஒரு வைரி யாகவே கருதுவேன்.

துரோ :—குமாரா! கடைசியில் உன் சிரத்தை இந்த வில் லாயுதத்திற்குப் பலியாகக் கொடுக்கத் தீர் மானித்து விட்டாயா?

அபி :— குருவைக் கொன்ற ஒரு பெரும் பாவத்தை என் ஆயுதத்திற்கு ஏற்றிவைக்க நீங்கள் தீர்மானித் திருக்கும்பொழுது நான் என்ன செய்யட்டும்? குருஹத்தி மட்டுமல்ல, ப்ரஹ்மஹத்தி, விருத்த ஹத்தி முதலிய எல்லாக் களங்கங்களும் என் ஆயுதத்திற்கு வந்து சேருகின்றன. ஆசாரிய! வேண்டாம், வேண்டாம், வேண்டாமென்று மும்முறை கூறுகிறேன். விரைவிலே திரும்பிச் செல்லுங்கள். கௌரவ சேனதிபதி புறமுதுகு காட்டிவிட்டார் என்ற பழிச்சொல் வாராமல் நான் பார்த்துக்கொள்கிறேன்.

துரோ :—[இழி நகையுடன்] எறும்பின் வார்த்தையைக் கேட்டு யானை திரும்பிப் போகவேண்டுமென்று கூறுவது போலிருக்கிறது!

அபி :— ஆனல் அந்த எறும்பு, யானையின் செவிக்குள் சென்று படுத்தும் பாட்டை ஆசாரியாருக்கு நான் எடுத்துக் கூறவேண்டுமா?

துரோ :—ஆனல் எடு ஆயுதத்தை!

அபி :— ஏறுங்கள் இரதத்தின் மீது!

[இருவரும் தத்தம் இரதத்தின் மீது ஆரோகணித்துக் கொள்கிறார்கள். யுத்த வாத்தியங்கள் முழங்குகின்றன]

அபி :— ஆசாரியார் முடியுமானல் சமாளித்துக்கொள்ளட்டும். [நாணேற்றி அம்பெய்கிறான்]

துரோ :—[வில்லெடுத்து] என்ன இது? ஏன் இப்படி கையினின்று வில் நழுவுகிறது? வஞ்சகர் நெஞ்சம் போல் மனம் குழம்புகிறது? [மௌனமாய் இருக்கிறார்]

அபி :— ஆசாரியார் ஏன் இப்படிக் கற்சிலைபோல் காணப்படுகிறார்?

துரோ :—அபிமன்யு!

அபி :— தோல்வியை ஒப்புக்கொண்டதாக ஆசாரியார் எனக்கு அறிவிக்கிறாரா?

துரோ :—அர்ஜுனனுக்கு ஆயுதப் பயிற்சி அளித்துவிட்டு, அவன் மகனுடன் போர்புரிந்து வெற்றிக்கொடி நாட்ட நான் ஒருபோதும் விரும்பவில்லை.

[ஒருபுறமாக இரதத்துடன் செல்கிறார். அபிமன்யுவின் பக்கத்தில் வாத்தியங்கள் சப்திக்கின்றன]

[காட்சி முடிகிறது]

இரண்டாவது களம்

இடம் :—யுத்தகளத்தின் மற்றொரு பாகம்.

காலம் :—காலை.

[துச்சாதனன் கீழே விழுந்து கிடக்கிறான். அவன் மீது அபிமன்யு ஆக்ரோஷத்துடன் உட்கார்ந் திருக்கிறான்]

அபிமன்யு :—என்ன சொன்னாய்? பால்குடிக்கும் குழந்தை! ஹூம்! அந்தக் குழந்தை இப்பொழுது உன் உதிரத்தைக் குடிக்கக் காத்துக்கொண்டிருக் கிறது. கண் விழித்துப் பார்.

துச்சாதனன் :—[புரண்டு] என்னை விட்டுவிடு.

அபி :— விட்டுவிடுவதா? உன்னையா? இந்த நர பிசாசத் தையா? [பொறுத்து] என்ன, விழித்துப் பார்க் கிறாய்? உன் சிவந்த கண்களால் என்னைச் சிதற அடித்துவிடலாமென்று பார்க்கிறாயா? இந்தக் கண்களைப் பிடுங்கிக் கழுகுகளுக்கு இரை யாக்கப் போகிறேன்! மாதா துரோபதையை தாசி திருஷ்டியுடன் நோக்கின கண்களல்லவா? [பொறுத்து] மகா பதிவிரதையான அந்தப் புண் ணியவதியை நடுச்சபையிலே இழுத்து வந்து அவமானப்படுத்திய இராட்சதப் பிண்டமல்லவா இது? “ஆறாகி யிருதடங்கண் அஞ்சன வெம் புனல் சோர அளகஞ்சோர வேறான துகில் தகைந்த கைசோர மெய்சோர வேறோர் சொல் லுங் கூறாமல் கோவிந்தா கோவிந்தா” வென்று என் தாய் அரற்றி நின்ற காலத்து, அவளைப் பார்த்துச் சிரித்த வாயல்லவா இது? [பொறுத்து] இந்தக் கரங்களைத் துண்டு துண்டாக நறுக்கி உலர்த்தி உலக்கையால் பொடி செய்து இச்செம் மண்ணோடு சேர்த்து அஸ்தினபுரி முழுவதும் கோலமிடவேண்டும். தேவேந்திரனின் மருகி, சவ்விய சாசியின் மனைவி, ‘கருமேக நெடுங்கடல்

கார் அனையான்' கழலிணையில் குழல் வைத்து வணங்கும் என் தாய், மனங்குலைய, மானங் குலைய அவளைக் கரகரவென்று பிடித்திழுத்து வந்த கரங்களல்லவா இவை? தேவர்களுந் தீண்டு தற்கரிய என் அன்னையின் திருமேனியைத் தீண்டி அவள் அடிவயிற்றில் என்று நெருப்பு வைத்தனையோ அன்றே குருகுலத்திற்கும் தீ மூட்டிவிட்டாய். வேகின்ற அந்த வெந்தணலிலே நீ ஒரு பொறி. பொறியிலே அகப்பட்ட எலிபோல் என்னிடம் அகப்பட்டுக் கொண்டு விட்டாய். பாரதப் போரெனும் இந்தச் சூரு வளியிலே உன்னைப் பறக்கவிடுகிறேன் பார். [பொறுத்து] சை! பொல்லா வசையே பூண்ட இந்தப் புல்லனைக் கொன்று நான் ஏன் வசை தேடிக்கொள்ள வேண்டும்? பீமனுடைய வேட்டையன்றோ இது? [எழுந்து] ஓடிப்போ! புனிதமான யுத்த க்ஷேத்திரத்தில், பிறன் மனையாளைத் தீண்டிய பேடிக்கு இடமில்லை; திரும்பிப் பாராமல் ஓடிப்போ.

[காட்சி முடிகிறது]

மூன்றாவது களம்

இடம்:—குருக்ஷேத்திரத்தில் பிறிதொரு புறம்.

காலம்:—காலை.

[துச்சாதனன், துரோணர், கர்னன், சல்யன், சகுனி முதலியோர் பேசிக்கொண்டிருக்கின்றனர்]

துரியோதனன்:—[வேகமாகப் பிரவேசித்து] ஆசாரிய! ஆசாரிய! என்ன அநியாயம் இது? யானைக் கூட்டத்திலே சிங்கக்குட்டி யொன்று வந்து இப்படிக் கலக்குகிறதே!

துரோ :—துரியோதனு! கவலைப்படாதே.

சகுனி :—கவலைப்படாதே; ஆசாரியார் இருக்கிறுர் ஆறுதல் கூற கடைசிகாலம் வரை.

துரோணர் :—[கோபத்துடன்] சகுனி......

துரி :— குருதேவ! குரு வமிசம் கருவழிக்கப்பட்டு வருவதைக் கண்டு நான் அழுவேனே? கர்னன் துணையிருக்க. சல்யன் சாகசம் இருக்க, சகுனியின் ஆலோசனையிருக்க. என் படையழிபடுவதைக் கண்டு நான் அழுவேனே?

கர்னன் :—அரசே! அமர்க்களத்திலே அதைரியப்படுவது அழகல்ல. வீரர்கள் விளை நிலமல்லவா இது?

சல்யன் :—பழிக்குப் பழி வாங்கவேண்டுமே தவிர சோர்வுடன் பின்னடையக்கூடாது.

துச்சாதனன் :—அஃது ஒருபோதும் நடவாது. என்னை எப்படி அவமானப்படுத்தினுன் அச்சிறுவன்?

துரி :— அந்தச் சிறுவன் ஒருவன், நம்மனைவரையும் சிந்தனையில் ஆழ்த்தி வைத்திருக்கிறுன். அவனை மடக்கி வீழ்த்துவது எப்படி?

துச் :— அப்படி வீழ்த்தாவிட்டால், குரு வமிசம் குருக்ஷேத்திரத்தில் ஐக்கியப்பட்டுவிட வேண்டியதுதான்.

சகு :— எனக்கு ஒன்று தோன்றுகிறது. அபிமன்யு சக்ரவியூகத்தை உடைத்தெறிந்து அதனின்றும் மீண்டுவரும்போது நாமனைவரும் அவனைச் சூழ்ந்துகொண்டு அடித்துக் கொன்றுவிடுவோம்.

துச் :— மிகச் சரியான யோசனை! எப்படியும் வாள் தவிர மற்றெல்லா யுத்தக் கருவிகளையும் அவன் இழந்துவிட்டான். அவ்வாளை மட்டும் தந்திரமாக வசப்படுத்திக்கொண்டு விட்டோமானுல்

பல்லைப் பிடுங்கின பாம்புபோல் அடங்கி விடுவான். அப்பொழுது அவனைக் கொல்வது எளிது.

துரோ :—அதருமம்! அநியாயம்!!

துரி :— ஆசாரிய! சத்துருக்களைச் சம்ஹாரம் செய்ய வேண்டுமென்ற இலட்சியத்தைப் பிரதானமாகக் கொண்டவர்கள், எந்தவிதமான தந்திரங்களை வேண்டுமானாலும் கையாளலாமல்லவா? சமாதான காலத்தில் அதருமமா யிருப்பது சண்டைக் காலத்தில் தருமமாகிவிடுகிறதல்லவா?

துரோ :—பதினாறு வயது பாலகனைக் கொல்ல இத்தனை பேர் சேர்ந்து சதி செய்வதா? கோழைத்தனம்! அவமானம்!!

சகு :— சேனாபதிக்குத் தருமோபதேசம் செய்ய அதிகாரமில்லை!

துரோ :—[தமக்குள்] சை! புழுக்களின் சகவாசம் நம்மையும் குப்பை மேட்டில் இழுத்துச் செல்கிறது. கோழைகளின் நட்பு, மனிதனை மிருகமாக்குகிறது. [பகிரங்கமாய்] சுயோதனா! நீ எதைச் செய்தாலும் செய். ஆனால் உன் பெயருக்கு, குரு வமிசத்தின் நற்புகழுக்கு, ஆரியா வர்த்தத்தின் பெருமைக்குக் களங்கம் விளைவியாதே. அபிமன்யுவோடு நேராகப் போராடி வெற்றி காண முடியவில்லையென்றால் அவனைக் கோழைத்தனமாகக் கொலை செய்ய முயலாதே. மார்பிலே அடிப்பதற்கும் அடிபடுவதற்குந்தான் பாரத தேச வீரர்களுக்குத் தெரியும். உன்னுடைய இந்த இழி செயலினால், உலகத்தாரெல்லாரும் நம் நாட்டைப் பார்த்துப் பரிகசிக்க இடங் கொடுத்து விடாதே.

சகு :— ஆசாரியாருடைய தருமோபதேசம் இராஜ சபையிலே அமைதியாகக் கேட்கப்பெறும். [எதிர்ப்புறத்தில் யுத்த கோஷம் கேட்கிறது]

துரி :— அதோ, வெற்றி முழக்கத்துடன் வீறிட்டு வருகிறான் அபிமன்யு!

[ஆரவாரத்துடன் அபிமன்யு பிரவேசிக்கிறான்]

அபி :— விடுதலை! விடுதலை! விடுதலை!

துச் :— நில்; இனிமேல் இல்லை.

அபி :— யார் அது? அட! துச்சாதனனா? எந்த முகத்துடன் என்னெதிரில் வந்து நிற்கிறாய்? உனக்கு வெட்கமில்லை? மானமில்லை? மானிட உருவத்திற்குள்ள உணர்ச்சிகூட உனக்கு இல்லையா?

சகு :— வலையிலே அகப்பட்ட பறவை கீச்சு கீச்சென்று கத்துகிறது.

அபி :— இவர்தான் சகுனி மாமாவோ? வாழையடி வாழையென வந்த குரு வமிசத்தை வீரமற்ற கோழையாக்கி, பாரத தேசத்துப் பெண் மக்களின் சாபமென்னும் பாழ்வெளியிலே பறக்கவிட்ட பெருமை இவருடையதுதானோ? [தலையசைத்து] உம் .....இந்தக் கண்ணைப்பார். முதுகாட்டை உகக்கும் காகங்கூட இதனைத் தொடாது.

துச் :— உன் வாய் வீச்செல்லாம் இங்கே ஓங்காது.

அபி :— ஆம்; இந்தப் பேடிகள் கூட்டத்தில், இந்தப் பேய்கள் மத்தியில் மனிதனுக்கு வேலையில்லையென்று நீங்கள் கருதினால் உடனே எனக்கு வழி விட்டுவிடுங்கள். இல்லையேல், இச்செம் மண்ணைவாயிலே கவ்விக்கொள்ளவேண்டிவரும். பாண்டவர்களால் பன்முறை தோற்கடிக்கப்பட்டும், அவர்களால் உயிர்ப் பிச்சையளிக்கப்பட்டும், இன்னும் எந்த வாயால் என்னோடு பேச வருகிறீர்கள்?

துரி :— அபிமன்யு! அர்ஜுனன் புத்திரனுகப் பிறந்தும், கிருஷ்ணனுடைய உபதேசங்களைப் பெற்றும் ஏன் இப்படி பெரியோர்களை நிந்திக்கிருய்?

அபி :— பெரியோர்கள், பெரியோர்களாக நடந்துகொண்டால் அவர்களை வணங்க அபிமன்யு எப்பொழுதும் சித்தமா யிருக்கிருன்.

துரி :— உன்னுடைய வீரத்தை நாங்கள் எப்பொழுதும் குறைவுபடுத்தியதில்லையே.

அபி :— மூத்தவர்களிடத்தில் நடந்துகொள்ள வேண்டிய முறைமையிலும் நான் பிசகியது கிடையாது.

துரி :— இந்த வார்த்தை உண்மைதானு?

அபி :— எல்லாம் வல்ல பரம்பொருளைப்போல் சத்தியமானது.

துரி :— அப்படியானுல் அந்த வாளை அப்படி எறிந்துவிட்டு என்னருகில் வா. உன் மூலமாகப் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் இன்று யுத்தகளத்திலேயே நட்பு எற்பட்டுவிட்டது.

அபி :— அஃதென் பாக்கியம். [வாளை உயரத்தூக்கி] வீரர் குழுவிலே என்னை வளர்த்து வந்த வாளாயுதமே! சிறிது விச்ராந்தி செய்துகொள். [வாளை ஒருபுறமாக வைக்கிருன்]

துரோ :—[தமக்குள்] அநியாயம்! என்ன மோசம்! நீசர்களுடைய உறவு இந்தக் காட்சியைத்தான் அளிக்கும்.

அபி :— [துரியோதனன் அருகிற்சென்று கைகூப்பி] தந்தையே! மைந்தன் வணங்கி நிற்கிறேன்.

[இச்சமயம் திடீரென்று ஆரவாரத்துடன் எல்லாரும் சேர்ந்து அபிமன்யுவைச் சூழ்ந்து பிடித்துக் கொள்கிருர்கள்]

துரி :— கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுங்கள். விட்டு விடாதீர்கள்.

துரோ :—[தமக்குள்] ஆகாசமே! இன்னும் என் கீழே விழாமல் இருக்கிருய்? பூமாதேவியே! இன்னும் என் நடுக்கங் கொள்ளாமலிருக்கிருய்?

அபி :— [ஆச்சரியத்துடன்] என்ன இது? விடுங்கள் என்னை!

சகு :— யமலோகம் சென்ற பிறகு.

அபி :— அட பேடிகளே! உங்களுக்கு லஜ்ஜைகூட இல்லையா? தலைவணங்கி நின்றவன் தலையிலே இப்படி அடிப்பதா? நீங்கள் க்ஷத்திரியர்களா? இதைவிட அதோ மலைமலையாகக் குவிந்து கிடக்கும் பிணங்களைத் தின்னலாமே! என்னை வெல்ல உங்களால் முடியவில்லை யென்ருல், என்னிடம் வந்து அடைக்கலம் புகுந்திருந்தால் உலகத்திலுள்ள எல்லாச் சத்துருக்களிடமிருந்தும் உங்களைக் காப்பாற்றி யிருப்பேனே!

சகு :— அதிகமாகக் கூத்தாடாதே.

அபி :— என்னை விட்டுவிடுங்கள்; உங்கள் தலைகள் உருளும்படி கூத்தாடுகிறேன். உங்கள் இருப்பிடத்தை ஸ்மசானமாக்கி அதில் சிவபிரானைப் போல் தாண்டவம் செய்கிறேன். விடுங்கள் என்னை. [விடுவித்துக் கொள்ள முயற்சிக்கிருன்] அட பாபிகளே! பச்சிலைச் சாறென உங்களைப் பிழிந்து விடுவேனென்று பயப்படுகிறீர்களா? [துரோணரைப் பார்த்து] ஆசாரிய! உங்கள் எதிரிலே இந்த அநியாயமா? நீங்கள் இதை அங்கீகரிக்கிறீர்களா? [பொறுத்து] என்முகத்தைத் தாழ்த்திக் கொள்கிறீர்கள்? நீங்கள் வீரரல்லவா? சத்திய சீலரல்லவா? தர்மக்ஞரல்லவா? உங்கள் சந்நிதியிலேயே இந்தத் துராசாரமா? யுத்த தர்மத்தை எல்லாருக்கும் உபதேசித்தருளும் நீங்களே இந்த அநியாயத்திற்கு இடங் கொடுத்

தால், உலகத்திலே வீரம் என்பது எங்கே? தருமம் என்பது எங்கே? குருதேவ! வாய்விட்டுச் சொல்லுங்கள் இந்தச் செயல் நியாயமென்று?

துரோ:—மகனே! அநியாயம் என்பதை நான் அறியாமலில்லை; அதருமம் என்பதை நான் உணராமலில்லை. ஆனால் என்னுடைய பிரதிக்ஞையே என்னை எச்செயலும் செய்யவொட்டாமல் சிறைப்படுத்தி யிருக்கிறது. பர தந்திரத்தினால் நான் சுதந்திர மிழந்து நிற்கிறேன்.

அபி:— ஆசாரிய! ஆசாரிய! நியாயமின்னதென்று சொல்லக்கூட உங்களுக்குச் சுதந்திரமில்லையா? அடே! தரும தேவதை, இந்தக் கோழைகளைக் கண்டு பாரத வர்ஷத்திலிருந்து ஓடிப்போய் விட்டாளா?

துரி:— அபிமன்யு! அதிகமாக ஆடாதே. எங்களுடைய தயவிலே இப்பொழுது நீ இருக்கிறாய். நீ மரணமடைவதும், உயிரோடிருப்பதும் எங்கள் வசத்தில் இருக்கிறது.

அபி:— அப்படியானால் எதைச் செய்யவேண்டுமோ அதைச் செய்யுங்கள்.

துரி:— விரும்பினால் பிராணபிட்சை அளிக்கிறோம்; கேள்.

அபி:— பிராணபிட்சை? அதுவும் உன்னைப்போன்ற வஞ்சகத் துச்சர்களிடமிருந்து? பிட்சை வேண்டுவது பிட்சாண்டிகளின் செயல்; க்ஷத்திரியர்களின் செயலன்று. அர்ஜுன குமாரன் இத்தகைய அற்பத்தனமான பிட்சையை எப்பொழுதுமே வேண்ட மாட்டான்.

துரி:— வேறு எது வேண்டுமானாலும் கேள்.

அபி:— உண்மையாகவா?

துரி :— உண்மையாக.

அபி :— அப்படியானல் அதோ ஓய்ந்து கிடக்கும் என் வாளை என்னிடம் கொடுத்துவிடுங்கள். பிறகு யார், யாரிடம் பிட்சை வேண்டுகிருர் என்பதைப் பாருங்கள். மாதா சுபத்திரை என்னைப் பெற்றெடுத்தது உண்மையானல், அந்த வாளாயுதம் ஒன்றைக் கொண்டு, உங்களெல்லாரையும், அதோ—அந்தக் குவியலோடு குவித்துவிட்டு சக்ரவியூகத்தைச் சிதற அடித்துக்கொண்டு எங்கள் பாசறைக்குச் செல்கிறேன்.

சகு :— பாசறையின் ஆசையை ஒழித்துவிடு.

துச் :— அந்த வாள் உன் கரத்தில் இனிச் சோபிக்காது.

அபி :— கௌரவர் கோமானே! ஏன் மௌனம் சாதிக்கிறீர்கள்?

துரி :— வீழ்த்திய வாளைத் திருப்பிக் கொடுக்கமுடியாது.

அபி :— எப்படிக் கொடுப்பீர்கள்? [பொறுத்து கர்னனைப் பார்த்து] கொடையாளி என்று நானிலம் போற்றும் கர்னனே! கொடுப்பதாகக் கூறி பிறகு அதை மறுத்துவிட்டதை இதுகாறும் பார்த்திருக்கிறீர்களா? ஏன் மௌனஞ் சாதிக்கிறீர்கள்? [பொறுத்து] சாரமற்ற எலும்புத் துண்டைக் கண்டு குரைக்கும் நாய்களே! நாய்க்குள்ள நன்றிகூட உங்களுக்கில்லை.

துச் :— அதிகமாகப் பேசாதே. [எல்லாரும் சேர்ந்து அபிமன்யுவை அடிக்கிருர்கள்]

அபி :— ஹா! மாமா! எல்லாம் உன்னடிமையே. எல்லாம் உன்னுடமையே. நீயே சாட்சி! கோழைகளால் கொல்லப்பட்டதாகக் குறை கூறி நின் குரை கழலில் என்னைச் சேர்த்துக்கொள்ள மாட்டாயா? ஐயோ! நான் மரணத்திற்காக அஞ்சவில்லை. அஃது ஆரிய ஜாதியின் தருமமன்று.

இந்தக் கோழைகளின் கையிலே, இந்த அற்பப் பூச்சிகளின் வசத்திலே சிக்கிக்கொண்டதால் எனக்குச் சொர்க்க வாசலையும் அடைத்து விடு வாயோ என்றுதான் அஞ்சுகிறேன். அண்டர் நாயக! அரியென்றோர்க்கு வாழ்வளித்த பெரும! வேழமுதலே யென அழைப்ப என்னென்று ஓடி வந்த அண்ணல்! தர்ம க்ஷேத்திரத்தில் தர்ம யுத்தம் புரிந்தேன்; தர்மத்திற்காக என்னைப் பலி கொடுக்கிறேன். ஆனல் அதருமிகளிடத்தில் சிக்கிக் கொண்டேன். ஆரியா வர்த்தத்தின் கௌரவத்திற்காக ஆரிய மாதாவின் அடியிலே என் உயிரை அர்ப்பணம் செய்கிறேன். எந்தாய்! நின்னருளிலே வளர்ந்து வாழ்ந்த நான் நின்னுரு வைக் காணுது போகிறேன். ஆனல் நின்னிடம் வேண்டுவதொன்றுண்டு. என்னை வீரனுக வளர்த்த என் தாய்க்கு—உன் சகோதரிக்கு— ஆறுதல் கூறு. [பொறுத்து] அம்மா! சுபத்திரே! உன் வாழ்க்கையின் விளக்கு அணைந்துவிட்டது. உன் பெருமைக்குரிய பிரதிபிம்பம் மறைந்து விட்டது. எனக்கு வீரதிலகமிட்டு வழியனுப்பி ணுய். வீரனுகத் திரும்பி வந்து உன் பொன்னடி பணியாத பாபியாகிவிட்டேன். ஆனல் நான் கோழையாக இறக்கவில்லை. வீரனுகவே மடி கிறேன். என் பிதாவுக்கு இதை எடுத்துச் சொல். [பொறுத்து] அப்பா! உங்கள் வில்லாண்மையெல் லாம் இந்தப் புல்லனுக்குப் பயன்படவில்லை. உங்களுடைய புத்திரன், உங்களுடைய தேஜஸ், உங்களுடைய வாழ்க்கையின் எதிரொலி— இதோ—மண்ணிலே மறைந்து போகிறுன். மகாத்மா யுதிஷ்டிரருக்கும், பீமனுதியோர்க்கும் என் வணக்கத்தைத் தெரிவியுங்கள். [பொறுத்து] உத்தரே! பிரியதமே! நீ எங்கே இருக்கிறுய்? பாசறையில் உன்னைப் பரிதவிக்கவிட்டு வந்தேன். கண்ணீரும் கம்பலையுமாக நின்றுய். இனி என் செய்வாய்? உன் காதற் களஞ்சியம, பிரேம பாத்திரம், இப்பொழுது மாசுபடிந்து கிடக்கிறது. உன் வாழ்க்கையின் உதய சந்திரனை ராகு கேதுக்

கள் சூழ்ந்து கொண்டு விட்டன. [பொறுத்து] அட பதர்களே! அநியாயமாக என்னை வஞ் சித்து—ஹா! மோசம்!—இதோ சன்மானம்! [காலால் அனைவரையும் உதைக்கிறான்]

துச்சாதனன் முதலியோர் :—பேசாதே; பேசாதே. [அனை வரும் சேர்ந்து அபிமன்யுவைத் தாக்குகிறார்கள்]

அபி :— ஹா! மாமா! வாசுதேவா!

துச் :— வாயைமூடு; அந்த இடையனுடைய பெயரைச் சொல்லாதே. [மீண்டும் அடிக்கிறார்கள்]

அபி :— கிருஷ்ணா! கிருஷ்ணா!!
[கீழே விழுந்து விடுகிறான்]

துச்சாதனன் முதலியோர் :—ஜெய! துரியோதன மகா ராஜருக்கு ஜெய!!

[காட்சி முடிகிறது.]

மூன்ருவது அங்கம்

முதற் களம்

இடம்:—உத்தரையின் படுக்கையறை,

காலம்:—பகல்.

[உத்தரை படுக்கையில் படுத்திருக்கிருள். உத்தரையின் தோழி பிரவேசிக்கிருள்]

தோழி:—[தனக்குள்] என்ன இது? ஒருநாளுமில்லாமல் இன்று பகல்வேளையில் இளைய ராணி தூங்குகின்ருள்! [அருகில் சென்று] உடம்பெல்லாம் முத்துமுத்தாக வியர்வை! முகம் சிவந்துவிட்டது! அவளைப் போய் அழைத்துக் கொண்டு வருகிறேன். [செல்கிருள்]

உத்தரை:—[கனவுகண்ட வண்ணம்] நாதா! நாதா! எங்கே போகிறீர்கள்? ஆயுதமெல்லாம் எங்கே? விமானத்தின் மீது ஏறிக்கொண்டு விட்டீர்களா?—என்ன? என்னை அழைத்துப்போக முடியாதா? நிச்சயமாகவா—? இப்படித் திரும்புங்கள்—! என்னைப் பார்த்துச் சொல்லுங்கள்! அதோ! தேவேந்திரன்!—புஷ்பவர்ஷம்!—ஐயோ! தேகத்தில் எத்தனை காயங்கள்!—இரத்தம் ஓடுகிறதே! ஐயா! ஏன் அடிக்கிறீர்கள்! நாதா! நாதா! [பொறுத்து விழித்துக் கொள்கிருள்] என்ன இது? பகலிலே கனவு! ஐயோ! ஒருவருமில்லையா இங்கே?

தோழி:—[உள்ளிருந்த வண்ணம்] இதோ வந்துவிட்டேனம்மா!

[காட்சி முடிகிறது]

இரண்டாவது களம்

இடம் :—குருக்ஷேத்திரத்தில் ஒரு பாகம்.

காலம் :—பகல்.

[யுதிஷ்டிரன், பீமன், சகதேவன் முதலியோர் இரதத்துடன் பிரவேசிக்கின்றனர்]

பீமன் :— முன்னே முடுகிச் செல்லுங்கள்.

யுதிஷ்டிரன் :— தம்பீ! இரு, அதோ, சேனைகள் ஏன் கலங்கியோடுகின்றன ?

சகதேவன் :— இதுகாறும் கேளாத பேரொலி இன்று கேட்கிறது.

பீம :— ஆம்; நகுலன் எங்கே?

சக :— அதோ! ஏதோ துர்ச்சம்பவம் நடந்திருக்கிறது!

[நகுலன் பிவேசிக்கிறான்]

நகுலன் :— அண்ணா! அண்ணா!

யுதி :— தம்பீ! என்ன செய்தி? யாருக்கு ஆபத்து?

நகு :— நம் மீது பேரிடி விழுந்து விட்டது; நாம் பாவி களாகி விட்டோம்.

பீம :— நகுல! என்ன விஷயம்? குழந்தை அபிமன்யு எங்கே?

நகு :— [அழுத வண்ணம்] சொர்க்க லோகத்திலே—

யுதி :— என்ன? என்ன? அபிமன்யு இறந்து விட்டானா?

நகு :— ஆம்; கௌரவர்கள் கொன்றுவிட்டார்கள்.

யுதி :— ஹா! [அப்படியே மூர்ச்சித்து விழுகிறான்]

பீம:— [பொறுத்துக் கோபத்துடன்] கௌரவர்கள் கொன்று விட்டார்கள்!—உம். இந்த தர்மமூர்த்திக்காக அடங்கிக் கிடந்த என் கோபத்தைக் கிளப்பி விட்டார்கள். கௌரவ சேனையாவும், குருக்ஷேத்திர இரத்த வெள்ளத்திலே முழுகாதவரை இந்தக் கோபம் தணியாது. [பொறுத்து ஆக்ரோஷத்துடன்] அபிமன்யு! அபிமன்யு! இந்த இரத்த வெள்ளத்திலே உன்னை நீராட்டி வைக்கிறேன். [பொறுத்து] அண்ணு! அண்ணு!

யுதி:— [மூர்ச்சை தெளிந்தெழுந்து துக்கத்துடன்] தம்பீ! மின்னுமல் இடி இடித்து விட்டது. அர்ஜுனனுக்கு நான் என்ன கூறுவேன்? 'என் மகனெங்கே' என்று கேட்டால் என் முகத்தை எங்கே வைத்துக் கொள்வேன்? சக்ரவியூகமெனும் வடவைத் தீயிலே தள்ளிவிட்டேன் என்று கூறுவேனு? [பொறுத்து] பதியிழந்தோம்! படைத்த நிதியிழந்தோம்! வனத்திலே வசித்தோம்! ஒளிந்து உயிர் வாழ்ந்தோம்! படாத பாடெல்லாம் பட்டோம்! கடைசியில், மகனே! உன்னையும் பறிகொடுத்து விட்டோம். இனி உலகத்திலே எங்களுக்குச் சுகம் என்பதேது? மகிழ்ச்சி யென்பதேது? [பொறுத்து] எந்த இராஜ்யத்துக்காக இந்தப் போர் நடைபெறுகிறதோ, அந்த இராஜ்யத்தை இனி யார் அனுபவிக்கப் போகிருர்கள்? நாங்கள் அடைந்த அவமானத்தை யெல்லாம், சகித்த துன்பத்தை யெல்லாம், உனக்கு மணிமகுடஞ் சூட்டி மறந்து விடலாம் என்று எண்ணியிருந்தோம். ஆனல், கானல்நீரிலே தாகசாந்தி செய்து கொண்டது போலாயிற்று. [பொறுத்து] அபிமன்யு! உன்னை அடிக்கடி அழைத்து மகிழ வேண்டுமென்ற ஆதுரத்தால் 'அபிமா' 'அபிமா' என்று அழைத்த வாயிலே மண்ணைப் போட்டு விட்டுப் போய் விட்டாய்! குழந்தாய்! நீ எங்கே சென்றிருக்கிருய்? வில்லாளி விஜயனிருக்க, மல்லாளும் வீமனிருக்க, மாநகுல சகதேவர் தாமிருக்க, பாவியான நானிருக்க, எல்லோருக்கும்

மேலாய் மரகதமாமலை போல், மாமா கிருஷ்ண மூர்த்தி இருக்க, வினையறியா இளஞ் சிங்கம் நீ இறப்பதா? பாரத தேசத்தில் இத்தகைய அநியாயம் எப்பொழுதேனும் நடந்திருக்கிறதா? [பொறுத்து] அப்பா! உன்னை மனமுவந்து இந்தக் கோர யுத்தத்திற்கு அனுப்பிய பாவியல்லவா நான்? அதன் பலனை மறுகணத்திலேயே அனுபவிக்கிறேன். மகனே! நெடுந்தேரூர்ந்து சென்றனை! இமைப் பொழுதிற் கிரியு முடைத்தனை! தெவ்வரோட வென்றனை! சுயோதனன் மகவுடனே மகவனைத்தும் கொன்றனை! ஆனால் மீண்டு வந்து நின்னுண்மை கூறக் கூசினையோ? [விசனிக்கிறான்]

பீம :— அண்ணா! துக்கப்படாதீர்கள் இந்தப் புத்திர சோகம் என்னும் நெருப்பைக் கண்ணீரால் அணைக்க முடியாது; கௌரவர்கள் இரத்தத்திலுலேயே அணைக்க முடியும்.

சக :— ஆம் அண்ணா! சென்றினிப்பகை முடித்து விஜயனுக்கு ஆறுதல் கூறுவோம்.

நகு :— அதோ வியாச மகரிஷி வருகிறார்.

[வியாசர் பிரவேசிக்கிறார்]

வியாசர்:—தர்மபுத்திரா!

யுதி :— மகரிஷி! என்னைத் தர்மபுத்திரன் என்று அழைக்க வேண்டாம். நான் பாபி—நராதமன்—நரபிசாசம்; தாயிருக்கக் கன்றைக் கொன்ற கொடும் பாதகன். பாண்டவர் குலத்திற்குப் பெரும் பழி தேடி வைத்து விட்டேன். ஐயா! எங்கள் குலக்கொழுந்து கருகிவிட்டது. அர்ஜுன குமாரன் இறந்து விட்டான். ஆரிய மாதாவின் வாழ்வு சீர்குலைந்து விட்டது. இனி நாங்கள் ஏன் இருக்க வேண்டும்? தவச்சிரேஷ்ட! இதற்கு மூலகாரணம் யார் தெரியுமா? இந்தப்

பேய்தான்; இந்தக் கற்பாறைதான். [வியாசரின் அடியில் விழுகிருன்]

வியா :— பாண்டு புத்திரா! அதைரியப்படாதே. இப்படி நீ துக்கப்படுவது அழகல்ல. விதி நியமத்தை யார் மாற்ற முடியும்? எல்லாம் அந்தப் பரந்தாமனின் திருவிளையாடலல்லவா?

யுதி :— அதைரியப்படாதே என்று சொல்வது எளிது. ஆனல் என் இருதயத்திலே எரி மலே அக்கினி ஜ்வாலையைக் கக்க ஆரம்பித்து விட்டது. அதிலும் உத்தரை, நாதனற்ற ஹீனையானதற்குக் காரணம் நானென்று நினைக்கையில் என் தேகமெல்லாம் கூசிக் குலைகிறது. பிரபு! அவளை விதவா வேஷத்துடன் நான் எப்படிப் பார்ப்பேன்? முனிவர! அபிமன்யுவைப் போன்ற புத்திரன், உலகத்திலே இனி யாருக்குக் கிடைக்கப் போகிருன்? அத்தகைய கர்மவீரர்கள் இனி இந்தப் பாரத நாட்டிலே தோன்றப் போகிருர்களா?

வியா :— பீமா! தமையனை பாசறைக்கு அழைத்துச் செல்.

பீம :— அண்ணு! வாருங்கள் பாசறைக்கு.

வியா :— எழுந்திரு யுதிஷ்டிரா! க்ஷத்திரிய குமாரனுக்கு இத்தகைய கலக்கம் உண்டாகலாமா?

யுதி :— [சென்று கொண்டே] அபிமன்யு! அபிமன்யு!

[அனைவரும் செல்கிருர்கள்]

மூன்ருவது களம்

இடம் :— பாண்டவர் பாசறைக்கு வரும் வழி.

காலம் :— பிற்பகல்.

[ஸ்ரீகிருஷ்ணனும் அர்ஜுனனும் பேசிக்கொண்டு வருகிருர்கள்]

அர் :— பகவன்! தங்கள் அனுக்கிரகத்தால் இன்று சம்சப்தகர்கள் வெற்றி கொள்ளப்பட்டார்கள்.

கிரு :— எல்லாம் உனது காண்டீவத்தின் மகிமைதான்—!

அர் :— ஆயினும் சத்துருக்களை வென்றதனுலுண்டாகும் மகிழ்ச்சி இன்று ஏன் எனக்கு உண்டாகவில்லை?

கிரு :— அர்ஜுன! அண்ட சராசரங்கள் யாவும் ஒரு நியமத்திற்குட்பட்டே நடைபெற்று வருகின்றன. இதனின்றும் மாந்தர் மாற முடியாது.

அர் :— இந்தத் தத்துவங்கள் என் செவியில் புகவேயில்லை. ஆனல், என்னையறியாமலே கண்களில் நீர் பெருகுகிறது; ஹிருதய நாடி வேகமாக அடிக்கிறது; உலகமெல்லாம் சூனியமாக என் கண்களுக்குப் புலப்படுகிறது. இந்த விபரீதத்தின் காரணமென்ன?

கிரு :— காரணம் என்னவென்று கூறுவேன்? காரியமொன்றையே கண்ணுல் பார்க்கிறேன்.

அர் :— அண்ணுல்! தங்கள் மாயையை யார் அறியவல்லார்? ஆயினும் நாம் விரைவில் நமது பாசறைக்குச் செல்வோம். தர்மாத்மா யுதிஷ்டிரரை விரைவிலே சென்று காண வேண்டுமென்ற ஆவல் கணத்திற்குக் கணம் அதிகமாகிறது.

கிரு :— அவசியம் செல்வோம்.

[செல்கிருர்கள்]

நான்காவது களம்

இடம் :— பாண்டவர் பாசறை.

காலம் :— பிற்பகல்.

[அபிமன்யுவின் சவம் கிடத்தப்பட்டிருக்கிறது. தலைப்பக்கம் உத்தரை அழுது கொண்டிருக்கிறாள். ஒரு புறம் அர்ஜுனன் மூர்ச்சையாகிக் கிடக்கிறான். மற்றொரு புறம் சுபத்திரை தலை விரிகோலமாய் பிரலாபித்துக்கொண்டிருக்கிறாள்]

சுபத்திரை :—[அபிமன்யுவின் தேகத்தைத் தடவிக் கொடுத்து] கண்ணே! அபிமன்யு! உன் மிருதுவான தேகத்திலே எத்தனை காயங்கள்? ஐயோ! நானிட்ட வீர திலகம் இன்னும் அழியாமலிருக்கிறதே! ஹா! கன்றிழந்த பசுவாய்க் கதறி நிற்கிறேன். அபிமன்யு! வாய் திறந்து ஒரு வார்த்தை சொல்லு. [பொறுத்து] கண்ணே! என் வாழ்வைச் சூனியமாக்கிவிட்டு, என் அடிவயிற்றிலே நெருப்பிட்டுவிட்டு எங்கடா சென்றுவிட்டாய்? வெற்றி மாலையுடன் திரும்பி வந்து வணங்குகிறேன் என்று எவ்வளவு மிடுக்காகச் சொன்னாயடா? இப்பொழுது நான் உன் பக்கத்திலே விழுந்து அழுது கொண்டிருக்கிறேன். கண்ணெடுத்துப் பார்க்கமாட்டாயா? ஐயோ! காலையிலே இங்கிருந்தாய்; பகலிலே உன்னைப் படுக்க வைத்து பிரலாபித்துக் கொண்டிருக்கிறேன். அப்பா! அபிமன்யு!

[ஸ்ரீகிருஷ்ணன் பிரவேசிக்கிறான்]

கிருஷ்ணர் ;—சுபத்திரே!

சுப :— அண்ணா! அண்ணா!! என் அபிமன்யு எங்கே? உன் மருமகன் எங்கே? கண்ணா! என் வாழ்வெல்லாம் வீழ்ந்து விட்டது! என் முதுமையின் ஊன்றுகோல் ஒடிந்து விட்டது! நின் திருக்கோலம் இங்கிருக்க, என்னருமைக் குமாரன்

பிணக்கோலமாகக் கிடக்கிருன்! [அபிமன்யுவின் சவத்தைப் பார்த்து] அப்பா! மகனே! பாரததேசத்துப் பெரும்புகழைச் சுதன்மையில் எடுத்துச் சொல்லச் சென்றனேயோ? கொஞ்சி நின்ருர் கதற, கூடி நின்ருர் பதற, எஞ்சியுள்ளார் இரங்கி ஏங்க, வஞ்சகமாகக் கௌரவர்கள் கொன்ற கதையைக் காலனிடத்தில் தெரிவிக்கப் போயினேயோ? சூரபத்மனை வெல்ல சுப்பிரமணியக் கடவுள் சென்றதுபோல் யுத்த களத்திற்குச் சென்ருய்! ஆனல்—ஆனல்—மகனே! மகனே! [மூர்ச்சையாகிருள்]

கிரு :— சுபத்திரே! அபிமன்யு இறக்கவில்லை; அமரனய் வாழ்ந்து கொண்டிருக்கிருன். வீரர்களின் இலட்சிய புருஷனய், பாரதவர்ஷத்தின் கௌரவமாய், இளைஞர்களின் உள்ளத்திலே, பத்தினிப் பெண்டிரின் இசையிலே பிரகாசித்துக் கொண்டிருக்கிருன்!

ஓம். சாந்தி! சாந்தி! சாந்தி!

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
திரு. சண்முகம் நூலகம்
தமிழியல்துறை

அச்சிட்டது: ஜானகி பிரிண்டிங் & பைண்டிங் ஒர்க்ஸ் புதுக்கோட்டை